[2021] 1 எஸ்.சி.ஆர். 191

அஜய் குமார் என்கின்ற பிட்டு மற்றும் ஒருவர்

-எதிர்-

உத்தராகண்ட் மாநில அரசு மற்றும் ஒருவர்

(குற்றவியல் மேல்முறையீடு எண்.88/2021)

ஜனவரி 29, 2021

மாண்புமிகு நீதியரசர் திரு. அசோக் பூஷன்,

மாண்புமிகு நீதியரசர் திரு. ஆர்.சுபாஷ் ரெட்டி

மற்றும்

மாண்புமிகு நீதியரசர் திரு. எம்.ஆர்.ஷா

குற்றவியல் நடைமுறைச் சட்டம், 1973 :

பிரிவு 319 - மனு - 17.08.2019 தேதியிடப்பட்ட உத்தரவு மூலம் மேல்முறையீட்டாளர்கள் அழைக்கப்பட்டனர் - மேல்முறையீட்டாளர்கள் நீதிமன்றம் முன்பு முன்னிலையாகாததால், 05.09.2019 அன்று பிணையத்தில் விடத்தக்க பிடியாணை வழங்கப்பட்டது மற்றும் குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 446-ன்கீழ் 18.09.2019 தேதியன்று பிணையில் விடத்தகா பிடியாணை வழங்கப்பட்டது - 17.08.2019 தேதியிடப்பட்ட உத்தரவுக்கெதிராக மேல்முறையீட்டாளர்கள் சீராய்வு மனு தாக்கல் செய்தனர் - 18.09.2019

தேதியிடப்பட்ட உத்தரவு பதிவில் வைக்கப்படவில்லை என்ற சங்கதியை மறைத்த காரணத்தால் சீராய்வு மனுவை உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்தது - உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு - முடிவு : பிரிவு 319-ன்கீழ் அதிகாரம் சிறப்பு வாய்ந்தது மற்றும் விருப்புரிமையானது, எப்போதாவதே செலுத்தப்பட வேண்டியதாகும் - 17.08.2019 தேதியிடப்பட்ட உத்தரவின் சரித்தன்மையை உயர்நீதிமன்றம் பரிசீலிக்கவில்லை - பின்னிட்ட நடவடிக்கைகள், 17.08.2019 தேதியிடப்பட்ட உத்தரவின் சரித்தன்மையையும், செல்லுந்தன்மையையும் பரிசீலிக்காததற்கான காரணமாக அமையாது - உயர்நீதிமன்றத்தின் உத்தரவு நிலைநிறுத்தத்தக்கதல்ல - சட்டப்படி புதிதாக சீராய்வினை பரிசீலிக்க உயர்நீதிமன்றத்திற்கு உத்தரவிடப்படுகிறது.

மேல்முறையீட்டினை அனுமதித்து, இந்நீதிமன்றம் தீர்மானித்ததாவது :

1. குற்றவியல் நடைமுறைச் சட்டம், பிரிவு 319-ன் கீழுள்ள அதிகாரமானது விருப்புரிமையானது என்றும், அச்சிறப்பு அதிகாரம் அரிதாகவே செலுத்தப்படவேண்டும். பொருத்தப்படவேண்டிய ஆய்வானது, குற்றச்சாட்டு வனையப்படும்போது, செலுத்தப்பட வேண்டிய முதல்நோக்கு வழக்கிற்கு மேலானது, சாட்சியம் எதிர்க்கப்படாமல் போனால், அது குற்றத்தண்டனைக்கு இட்டுச் செல்லும் என்ற அளவுக்கு திருப்தியற்றதாக இருக்கும்.

ஹர்தீப் சிங் -எதிர்- பஞ்சாப் மாநில அரசு மற்றும் பலர் (2014) 3 எஸ்.சி.சி. 92 : [2014] 2 எஸ்.சி.ஆர். 1 - பின்பற்றப்பட்டது.

ராஜேஷ் மற்றும் பலர் -எதிர்- ஹரியானா மாநில அரசு (2019) 6 எஸ்.சி.சி. 368 : [2019] 8 எஸ்.சி.ஆர். 187 – சார்வுறப்பட்டது.

2.1. கு.ந.ச., பிரிவு 319-ன்கீழ் கூடுதல் மாவட்ட நீதிபதியால் அழைப்பாணையிடப்பட்ட மேல்முறையீட்டாளர்கள் 17.08.2019 தேதியிடப்பட்ட உத்தரவின் சரித்தன்மையை உயர்நீதிமன்றம் ஆராயாது கு.ந.ச., பிரிவு 446-ன்கீழ் அறிவிப்பு வழங்கப்பட்ட பிந்தைய பொருண்மைகள் அதாவது 18.09.2019 தேதியிடப்பட்ட உத்தரவின் அடிப்படையில் குற்றவியல் சீராய்வினை செய்துள்ளது உயர்நீதிமன்றத் தீர்ப்பினைப் பார்க்கும்போது காட்டுகிறது. கு.ந.ச., பிரிவு 319-ன்கீழ் ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டதாலும், கு.ந.ச., பிரிவு 319-ன்கீழ் சீராய்வு மனுதாரர்களை அழைக்கும் 17.08.2019 தேதியிடப்பட்ட எதிர்ப்புக்குள்ளான உத்தரவு உடன் எதிர்க்கப்படாதது மனுதாரர்களின் கொள்கை இருக்கும்வரை, நடவடிக்கையில் 18.09.2019 நாளிட்ட உத்தரவு இருக்கும்வரை உயர்நீதிமன்றத்தின் முன் நிலைநிற்கும் என மேலும் உயர்நீதிமன்றம் கருதியுள்ளது.

2.2. மேல்முறையீட்டாளர்களுக்கு அழைப்பாணை அனுப்பட்டிருந்தும் ஆனால் அவர்கள் முன்னிலையாகவில்லை, எனவே பிணையுடன் கூடிய பிடியாணை மேல்முறையீட்டாளர்களுக்கெதிராக பிறப்பிக்கப்பட்டது என்பதை 05.09.2019 நாளிட்ட உத்தரவு தாள் காட்டுகிறது. பின்னர், 18.09.2019-இல் பிணையற்ற பிடியாணை வழங்கப்பட்டுள்ளது. 17.08.2019 தேதியிடப்பட்ட

உத்தரவின் விளைவான மற்றும் தொடர்ச்சியான நடவடிக்கைகள், 05.09.2019 மற்றும் 18.09.2019 அன்று எடுக்கப்பட்ட நடவடிக்கைகளாகும். பின்னர் உள்ள நடவடிக்கைகள் எந்த வகையிலும் 17.08.2019 தேதியிடப்பட்ட உத்தரவின் சரித்தன்மை மற்றும் செல்லுந்தன்மையை பரிசீலிக்காமல் இருப்பதற்கான காரணமாகாது. கு.ந.ச., பிரிவு 446-ன்கீழ் 18.09.2019 அன்று அறிவிப்பு வழங்கப்பட்டது என்ற காரணத்தின்பேரில், 17.08.2019 தேதியிடப்பட்ட உத்தரவின் சரியான தன்மையை பரிசீலிக்க மறுத்து உயர்நீதிமன்றம் முற்றிலும் தவறிழைத்துவிட்டது. கு.ந.ச., பிரிவு 319-ன்கீழ் உள்ள அதிகாரத்தை செலுத்தி, 17.08.2019 தேதியிடப்பட்ட உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கக்கூடாது எனக் காணப்படும்போது, பின்னர் நடவடிக்கைகள் அனைத்தும் தாமாகவே முடிவுக்கு வந்துவிடும். 18.09.2019 தேதியிடப்பட்ட உத்தரவு மூலம் குற்றஞ்சாட்டப்பட்ட மேல்முறையீட்டாளரை முன்னிலையாகும்படி நீதிமன்றம் உத்தரவு பிறப்பிக்கும்போது, அது பொருத்தமான முடிவாக எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். ஆனால், மேல்முறையீட்டாளருக்கு அழைப்பாணை விடுக்கப்பட்ட 17.08.2019 தேதியிடப்பட்ட முந்தைய உத்தரவுக்கு, அந்த உத்தரவு பாதுகாப்புக்கு கேடயமாக அமையாது.

3. பதிவில் கொண்டு வரப்பட்ட நீதிமன்ற பிந்தைய நடவடிக்கைகள், 2 மற்றும் 1-ஆம் மேல்முறையீட்டாளர்கள் நீதிமன்றம் முன்பு முன்னிலையாகி, அவர்களுக்கு பிணை வழங்கியதை காட்டுகிறது.

4. சம்பவம் நடந்த நாளன்று 1-ஆம் மேல்முறையீட்டாளரின் பிறந்த தேதி 01.04.2000 ஆக இருந்ததால் அவர் இளங்குற்றவாளி என்பது இந்த மேல்முறையீட்டில் எடுக்கப்பட்ட காரணங்களில் ஒன்றாகும். மேற்சொன்ன காரணம் உயர்நீதிமன்றத்தால் பரிசீலிக்கப்பட்டிருக்க வேண்டும். மேல்முறையீட்டாளர்களின் குற்றவியல் சீராய்வு மனு சட்டப்படி உயர்நீதிமன்றத்தால் புதிதாக பரிசீலிக்கப்படவேண்டும். மேல்முறையீடு அனுமதிக்கப்படுகிறது.

பார்வையிடப்பட்ட தீர்முடிவுகள்

[2014] 2 எஸ்.சி.ஆர். 1	பின்பற்றப்பட்டது	பத்தி 5
[2019] 8 எஸ்.சி.ஆர். 187	சார்வுறப்பட்டது	பத்தி 6

குற்றவியல் மேல்முறையீட்டு அதிகாரவரம்பு : குற்றவியல் மேல்முறையீடு எண்.88/2021.

நைனிடாலில் உள்ள உத்தராகண்ட் உயர்நீதிமன்றத்தின் குற்றவியல் சீராய்வு எண்.570/2019-இல், 27.09.2019 தேதியிடப்பட்ட தீர்ப்புரை மற்றும் உத்தரவிலிருந்து எழுகிறது.

தரப்பினர்கள் சார்பாக முன்னிலையான வழக்குரைஞர்கள் - வினய் அரோரா, துணை அரசு தலைமை வழக்குரைஞர், பிரதீப் குப்தா, பரினவ் குப்தா, செல்வி. மான்சி குப்தா, கிருஷ்ண குமார், செல்வி. நந்தனி குப்தா, முனைவர். (திருமதி) விபின் குப்தா, ரன்பிர் சிங் யாதவ், ப்ரதீக் யாதவ், திருமதி. ப்ரதிமா யாதவ்.

இந்நீதிமன்றத்தின் தீர்ப்புரையானது மாண்புமிகு நீதியரசர் திரு. அசோக் பூஷன் அவர்களால் பகரப்பட்டது.

அனுமதி வழங்கப்பட்டது.

2. மேல்முறையீட்டாளர்களால் தாக்கல் செய்யப்பட்ட குற்றவியல் சீராய்வு மனுவை தள்ளுபடி செய்த உயர்நீதிமன்றத்தின் 27.09.2019 தேதியிடப்பட்ட உத்தராகண்ட் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்புரைக்கெதிராக இம்மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. லக்சர் கூடுதல் மாவட்ட நீதிபதியால் பிறப்பிக்கப்பட்ட 17.08.2019 தேதியிடப்பட்ட உத்தரவை எதிர்த்து மேல்முறையீட்டாளர்கள் இந்த குற்றவியல் சீராய்வு மனு தாக்கல் செய்யப்பட்டது, அதில் மேல்முறையீட்டாளர்களுக்கு குற்றவியல் நடைமுறைச் சட்டம், பிரிவு 319-ன்கீழ் அழைப்பாணை விடுக்கப்பட்டது.

3. இம்மேல்முறையீட்டினை முடிவு செய்ய வழக்கின் சுருக்கமான பொருண்மைகளை குறிப்பிடுவது அவசியமாகிறது :-

i. மேல்முறையீட்டாளர் பிற ஆறு குற்றஞ்சாட்டப்பட்டவர்களுடன் சேர்த்து ஹரித்துவார், லக்சர், கோட்வாலி காவல் நிலையத்தில் இ.த.ச. பிரிவு 147, 148, 149, 323, 324, 307, 450, 504 மற்றும் 506-ன்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள முதல் தகவல் அறிக்கை எண்.175/2015-இல் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளார். அதே காவல் நிலையத்தில் இ.த.ச. பிரிவு 147, 148, 149, 307, 452, 504 மற்றும் 506- ன்கீழ் முதல் தகவல்

அறிக்கை எண்.176/2016-ம் பதிவு செய்யப்பட்டு, புகார்தாரரும், பிற குற்றஞ்சாட்டப்பட்டவர்களுடன் எண்ணிடப்பட்டனர். காவல் துறையினர் புலன் விசாரணை செய்து, மேல்முறையீட்டாளர்களை குற்றத்திலிருந்து விடுவித்து அறிக்கை தாக்கல் செய்தது. விசாரணை அதிகாரி, விசாரணைக்குப் பின்னர் குற்ற அறிக்கையிலிருந்து குற்றஞ்சாட்டப்பட்டவர்களின் பட்டியலிலிருந்து மேல்முறையீட்டாளர்களான பிட்டு மற்றும் ஜோதி ஆகியோரின் பெயரை நீக்கியுள்ளார்.

ii. வழக்கு எண்.228/2016-இல் விசாரணை ஆரம்பிக்கப்பட்டு, தகவலளித்த பாகல் சிங் அ.சா-1-ஆக விசாரிக்கப்பட்டார். தனது வாக்குமூலத்தில், மேல்முறையீட்டாளர்கள் உள்பட எல்லா குற்றஞ்சாட்டப்பட்டவர்களையும் காட்டி கொடுத்தார். ஆனால் மேல்முறையீட்டாளரின் குறிப்பிட்ட பங்கு கூறப்படவில்லை. அ.சா-2 மோனுவின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டு, அதில் மேல்முறையீட்டாளர்கள் காட்டிக் கொடுக்கப்பட்டனர். அமர்வு நீதிபதி முன்பாக, இந்த வழக்கில் மேல்முறையீட்டாளர் அழைக்கக் கோரி குற்றவியல் நடைமுறைச் சட்டம், பிரிவு 319-ன்கீழ் தகவல் அளித்தவர் மனு தாக்கல் செய்தார். அ.சா-1 மற்றும் அ.சா-2-ஆல் நீதிமன்றத்தால் தரப்பட்ட வாக்குமூலத்தை விரிவாகப் பார்த்த

கற்றறிந்த அமர்வு நீதிபதி, தமது 21.06.2018 தேதியிடப்பட்ட உத்தரவு மூலம் மனுவை நிராகரித்தார். 21.06.2018 தேதியிடப்பட்ட உத்தரவிற்கெதிராக, தகவல் அளித்த பாகல் சிங் உயர்நீதிமன்றம் முன்பாக குற்றவியல் சீராய்வு மனு எண்.304/2018-ஐ தாக்கல் செய்தார்.

iii. வெளியிடப்பட்ட **ராஜேஷ் மற்றும் பலர் -எதிர்- ஹரியானா மாநில அரசு (2019) 6 எஸ்.சி.சி. 368**-ன் தீர்ப்புரையைச் சார்ந்து, சீராய்வை அனுமதித்து, குற்றவியல் நடைமுறைச் சட்டம், பிரிவு 319-ன்கீழ் மனுவை புதிதாக பரிசீலிக்க உத்தரவிட்டது. உயர்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவின் செயல்படுத்தும் பகுதியான பத்தி 7 பின்வருமாறு;

"7. ஹரித்வார், லக்சரிலுள்ள கூடுதல் அமர்வு நீதிபதியால் கூறப்பட்ட காரணங்களையும், மேற்சொன்ன தீர்ப்பின் அகவுரையையும் பரிசீலித்த பின்னர், சீராய்வு மனு அனுமதிக்கத்தக்கது என இந்நீதிமன்றம் கருத்துரைத்து, அதன் விளைவாக அம்மனுவை அனுமதித்தது. ஹரித்வார் மாவட்டம், லக்சர் கற்றறிந்த கூடுதல் அமர்வு நீதிபதியால், அமர்வு விசாரணை எண்.228/2016, மாநிலம் -எதிர்- சந்திரா பால் மற்றும் பலர் என்ற வழக்கில் 21.06.2018 அன்று வழங்கப்பட்ட உத்தரவு

செல்லாதாதாக்கப்படுகிறது. மாண்புமிகு உச்சநீதிமன்றத்தின் **மேற்படி ராஜேஷ் என்ற வழக்கில்** கூறப்பட்ட சட்ட அகவுரையை கருதி மனு எண்.53(கா/1)-ஐ மறுபரிசீலனை செய்யும்படி ஹரித்வார் மாவட்டம் லக்சர் கூடுதல் அமர்வு நீதிபதிக்கு திருப்பியனுப்பப்படுகிறது."

iv. 11.07.2019 தேதியிடப்பட்ட குற்றவியல் சீராய்வின் உயர்நீதிமன்ற உத்தரவுக்கு பின்னர், கற்றறிந்த அமர்வு நீதிபதி குற்றவியல் நடைமுறைச் சட்டம், பிரிவு 319-ன்கீழ் மீண்டும் மனுவை பரிசீலித்தார். உயர்நீதிமன்றத்தால் பத்தி 5-இல் அளிக்கப்பட்டுள்ள கருத்துக்களையும், இந்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பினையும் மேற்கோள் காட்டி கற்றறிந்த அமர்வு நீதிபதி மனுவை அனுமதித்து, 17.08.2019 தேதியிடப்பட்ட உத்தரவு மூலம் மேல்முறையீட்டாளர்களுக்கு அழைப்பாணை விடுத்தார். விசாரணை நீதிமன்றம் மேல்முறையீட்டாளர்களுக்கு எதிராக 05.09.2019 அன்று பிணையில் விடக்கூடிய பிடியாணையை வழங்கியது, பிணையில் விடக்கூடிய பிடியாணை வழங்கப்பட்ட பின்னரும், அவர்கள் 18.09.2019 அன்று ஆஜராகாததால், மேல்முறையீட்டாளர்களுக்கு பிணையில் விடத்தகா பிடியாணை வழங்கப்பட்டு, இரு பிணையாட்களான அருண்குமார்

மற்றும் சந்திரா பால் ஆகியோரிடமிருந்து ஏன் பிணைத்தொகை பெறப்படவில்லை என கோரி குற்றவியல் நடைமுறைச் சட்டம், பிரிவு 446-ன்கீழ் அறிவிப்பு வழங்கியது. அவர்களை அழைக்கும்படியான கூடுதல் அமர்வு நீதிபதியால் 17.08.2019-இல் வழங்கப்பட்ட உத்தரவுக்கு எதிர்த்து உயர்நீதிமன்றம் முன்பாக மேல்முறையீட்டாளர்கள் குற்றவியல் சீராய்வினை தாக்கல் செய்தனர்.

v. பின்னர் 18.09.2019 தேதியிடப்பட்ட உத்தரவில் குற்றவியல் நடைமுறைச் சட்டம், பிரிவு 446-ன்கீழ் அறிவிப்பு அனுப்பியதைக் கவனித்து உயர்நீதிமன்றம் சீராய்வைத் தள்ளுபடி செய்தது. சீராய்வு 23.09.2019-இல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எனினும் 18.09.2019-இல் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவு பதிவாவணத்தில் கொண்டு வரப்படவில்லை என்றும், அதனால் பதிவுருப்பில் உத்தரவு வைக்கப்படாமல் மறைக்கப்பட்டுள்ளது என உயர்நீதிமன்றம் கருத்துரைத்தது. குற்றவியல் நடைமுறைச் சட்டம், பிரிவு 319-ன்கீழ் மனுவை அனுமதித்து தொடர்ச்சியான நடவடிக்கை ஏற்கனவே துவக்கப்பட்டுள்ளதால், அதில் சீராய்வு மனுதாரர்கள் சீராய்வு நீதிமன்றத்தின் அதிகாரவரம்பில் ஏற்கனவே வந்துள்ளதால், அதில் 18.09.2019-இல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதால் சீராய்வு தள்ளுபடி

செய்யப்படவேண்டியுள்ளது என உயர்நீதிமன்றம் மேலும் கருத்தியுள்ளது. 27.09.2019 தேதியிட்ட உயர்நீதிமன்றத்தின் உத்தரவில் பாதிக்கப்பட்டு, இம்மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டது.

4. தரப்பினர்களுக்கு ஆதரவான கற்றறிந்த வழக்குறைஞர்களின் வாதங்களை கேட்டோம் மற்றும் பதிவுருக்களையும் பார்வையிட்டோம்.

5. குற்றவியல் நீதிமன்றம், குற்றவியல் நடைமுறைச் சட்டம், பிரிவு 319-ன்கீழ் அதிகாரத்தைச் செலுத்துவதற்கான கோட்பாடுகள் நன்கு அறுதியிடப்பட்டுள்ளன. இந்நீதிமன்றத்தின் அரசமைப்பு அமர்வு, **ஹர்தீப் சிங் -எதிர்- பஞ்சாப் மாநில அரசு மற்றும் பலர்,** (2014) 3 **எஸ்.சி.சி. 92 என்ற வழக்கில்,** குற்றவியல் நடைமுறைச் சட்டம், பிரிவு 319-ன்கீழ் உள்ள எல்லா எல்லைகளும், விரிவாக பரிசீலித்தது. குற்றவியல் நடைமுறைச் சட்டம், பிரிவு 319-ன் கீழுள்ள அதிகாரமானது விருப்புரிமையானது என்றும், அச்சிறப்பு அதிகாரம் அரிதாகவே செலுத்தப்படவேண்டும் என இந்நீதிமன்றம் தீர்மானித்தது. பொருத்தப்படவேண்டிய ஆய்வானது, குற்றச்சாட்டு வனையப்படும்போது, செலுத்தப்பட வேண்டிய முதல்நோக்கு வழக்கிற்கு மேலானது, சாட்சியம் எதிர்க்கப்படாமல் போனால், அது குற்றத்தண்டனைக்கு இட்டுச் செல்லும் என்ற அளவுக்கு திருப்தியற்றதாக இருக்கும் என இந்நீதிமன்றம் தீர்மானித்தது. பத்தி 105 மற்றும் 106, கீழ்க்கண்டவை கூறப்பட்டுள்ளன :

"105. குற்றவியல் நடைமுறைச் சட்டம், பிரிவு 319-ன் கீழுள்ள அதிகாரம் விருப்புரிமையானது மற்றும் தனிச்சிறப்பான அதிகாரம் வழக்கின் சூழ்நிலைகள் அவ்விதம் கோரும் போது மட்டும் அது எப்போதாவது செலுத்தப்படவேண்டியதாகிறது. குற்றவியல் நடுவரோ அல்லது அமர்வு நீதிபதியோ, அந்த குற்றத்தை வேறு நபர் செய்திருக்கலாம் எனக் கருதுவதன் காரணமாக அந்த அதிகாரம் செலுத்தப்பட வேண்டியதில்லை. நீதிமன்றம் முன்பு, ஒரு நபருக்கு எதிராக சாட்சியத்திலிருந்து இட்டுச் செல்ல, வலிமையான மற்றும் நம்பத்தகுந்த சாட்சியம் இருந்தால் மட்டும் அத்தகைய அதிகாரம் செலுத்தப்பட வேண்டும், அது தற்செயலாகவும் மற்றும் கவனக்குறைவாகவும் அல்ல.

106. எனவே, நீதிமன்றம் முன்பு அளிக்கப்பட்ட சாட்சியத்திலிருந்து வழக்கின் முகாந்திரம் மட்டுமே நிறுவப்பட்டிருந்து, அது குறுக்கு விசாரணையின்போது சோதிக்கப்பட வேண்டியதில்லையெனில், அவர் உடந்தையாக மட்டுமே இருந்திருக்கக்கூடும் என்பதை விட மிக வலிமையான சான்று வேண்டியுள்ளது என்று நாங்கள் முடிவு செய்கிறோம். பொருத்தப்படவேண்டிய சோதனையானது, குற்றச்சாட்டு வனையப்படும்போது முதல்நோக்கு வழக்காக செலுத்தப்பட வேண்டியதற்கு மேலானது, எனினும் சாட்சியம் எதிர்க்கப்படாவிட்டால், அது தண்டனை தீர்ப்பிற்கு வழிவகுக்கும் என்ற அளவுக்கு திருப்தி குறைவாக உள்ளது.

அவ்வாறு திருப்தி குறையும்பட்சத்தில், குற்றவியல் நடைமுறைச் சட்டம், பிரிவு 319-ன்கீழ் அதிகாரம் செலுத்துவதை நீதிமன்றம் தவிர்க்க வேண்டும். கு.ந.ச., பிரிவு 319-இல், "குற்றஞ்சாட்டப்பட்டவராக இல்லாத ஒரு நபர் ஒரு குற்றத்தை செய்திருந்தால்" என அளிக்கப்பட்டுள்ளதன் நோக்கம், "அதற்காக அத்தகைய நபர் குற்றஞ்சாட்டப்பட்டவருடன் சேர்ந்து விசாரணை செய்யப்படவேண்டும்" என்ற வார்த்தைகளிலிருந்து தெளிவாகிறது. "அதற்காக அந்நபர் தண்டிக்கப்பட வேண்டும்" என்ற வார்த்தைகள் பயன்படுத்தப்படவில்லை. குற்றஞ்சாட்டப்பட்டவரின் குற்றம் குறித்து கருத்துக்கு வர, கு.ந.ச., பிரிவு 319-ன்கீழ் செயல்பட நீதிமன்றத்திற்கு எந்த வாய்ப்பும் இல்லை."

6. இந்நீதிமன்றத்தின் இரு நபர் அமர்வு அதே அகவுரையை மீண்டும் மேற்படி **ராஜேஷ் மற்றும் பலர் -எதிர்- ஹரியானா மாநில அரசு என்ற வழக்கிலும்** மீண்டும் அளித்துள்ளது, அது எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரையில் உயர்நீதிமன்றத்தால் சார்வுறப்பட்டது.

7. உயர்நீதிமன்றம் சீராய்வை மறுப்பதற்கான காரணத்தை தற்போது நாம் காணலாம். வழக்கின் சங்கதிகளை கருத்திற்கொண்டு உயர்நீதிமன்றம் சீராய்வை பரிசீலிக்க தொடர்ந்தது, அதனை தள்ளுபடி செய்வதற்கான காரணங்களை கீழ்கண்ட வார்த்தைகளில் பதிவு செய்துள்ளது :-

"தற்போதைய சீராய்வு மனுதாரர்களால் அமர்வு நீதிமன்றம் முன்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டு, 18.09.2019 அன்று அதில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது, அதில் கு.ந.ச., பிரிவு 446-ன்கீழ் தற்போதைய சீராய்வு மனுதாரருக்கு அறிவிக்கை வழங்கப்பட்டது என்ற விளைவுக்கு சீராய்வு மனுவிற்கு ஆதரவாக மனு தாக்கல் செய்யப்பட்டதை பத்தி 10-இல் குறித்துக்காட்டப்பட்டுள்ளது.

கீழமை நீதிமன்றம் பிறப்பித்த இந்த உத்தரவு 18.09.2019-இல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு தொடர்புடையது. மேற்படி உத்தரவின் நகல் 21.09.2019 அன்று சீராய்வு மனுதாரரால் பெறப்பட்டது என்பது, அது குற்றவியல் சீராய்வு மனுவின் ஒரு பகுதியாக இல்லையென்றாலும், விசாரணையின் போது சீராய்வு மனுதாரரின் கற்றறிந்த வழக்குரைஞரால் இந்நீதிமன்றத்திற்கு அளிக்கப்பட்டுள்ள இணைப்பு புத்தகத்துடன் சேர்த்து 18.09.2019 தேதியிடப்பட்ட உத்தரவின் சான்றிடப்பட்ட நகலிலிருந்து வெளிப்படுகிறது.

சீராய்வு மனு 23.09.2019-இல் தாக்கல் செய்யப்பட்டது. நீதிமன்றத்தால் பிரிவு 446-ன்கீழ் வழங்கப்பட்ட உத்தரவு பதிவிற்கு கொண்டுவரப்படவில்லை. சீராய்வு மனு தாக்கல் செய்யப்படுவதற்கு முன்னர் சீராய்வு மனுதாரரால் பிறவாறு பெறப்பட்ட உத்தரவை பதிவில் வைக்கப்படாமல், மறைக்கப்பட்டுள்ளது என்ற சங்கதியைத் தவிர மேலும்

கு.ந.ச., பிரிவு 319-ன்கீழ் மனுவை அனுமதித்ததன் தொடர்ச்சியான நடவடிக்கை ஏற்கனவே துவக்கப்பட்டு, அதில் சீராய்வு மனுதாரர் சீராய்வு நீதிமன்ற வரம்பினை ஏற்கனவே கோரப்பட்டு, அதில் 18.09.2019 நாளிட்ட உத்தரவு வழங்கப்பட்டுள்ளது என்பதை இந்நீதிமன்றம் கருத்தில் கொண்டுள்ளது.

இந்த சீராய்வு மனு தாக்கல் செய்வதற்கு முன்னர் அமர்வு நீதிமன்றம் முன்பு ஏற்கனவே நடவடிக்கைகள் இருப்பதன் காரணமாக, தற்போதைய சீராய்வு மனுதாரரின் கோரிக்கையின்படி 18.09.2019-இல் வழங்கப்பட்ட உத்தரவு இருக்கும்வரை, கு.ந.ச., பிரிவு 319-ன்கீழ் சீராய்வு மனுதாரரை விசாரணைக்கு அழைக்கும் 17.08.2019 நாளிட்ட எதிர்ப்புக்குள்ளான உத்தரவு ஒரே நேரத்தில் எதிர்ப்பது நிலைநிறுத்த முடியாது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

விளைவாக, இந்த சீராய்வு தகுதியற்றது, இந்நீதிமன்றம் முன் நிலைநிறுத்தப்பட முடியாததால் அது தள்ளுபடி செய்யப்படுகிறது."

8. கு.ந.ச., பிரிவு 319-ன்கீழ் கூடுதல் மாவட்ட நீதிபதியால் அழைப்பாணையிடப்பட்ட மேல்முறையீட்டாளர்கள் 17.08.2019 தேதியிடப்பட்ட உத்தரவின் சரித்தன்மையை உயர்நீதிமன்றம் ஆராயாது கு.ந.ச., பிரிவு 446-ன்கீழ் அறிவிப்பு வழங்கப்பட்ட பிந்தைய பொருண்மைகள் அதாவது 18.09.2019 தேதியிடப்பட்ட உத்தரவின் அடிப்படையில் குற்றவியல் சீராய்வினை

செய்துள்ளது உயர்நீதிமன்றத் தீர்ப்பினைப் பார்க்கும்போது காட்டுகிறது. கு.ந.ச., பிரிவு 319-ன்கீழ் ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டதாலும், கு.ந.ச., பிரிவு 319-ன்கீழ் சீராய்வு மனுதாரர்களை அழைக்கும் 17.08.2019 தேதியிடப்பட்ட எதிர்ப்புக்குள்ளான உத்தரவு உடன் எதிர்க்கப்படாதது மனுதாரர்களின் கொள்கை இருக்கும்வரை, நடவடிக்கையில் 18.09.2019 நாளிட்ட உத்தரவு இருக்கும்வரை உயர்நீதிமன்றத்தின் முன் நிலைநிற்கும் என மேலும் உயர்நீதிமன்றம் கருதியுள்ளது.

9. மேல்முறையீட்டாளர்கள் அழைப்பாணை விடுக்கப்பட்ட 17.08.2019 நாளிட்ட உத்தரவிற்குப் பிந்தைய நடவடிக்கைகளின் தன்மையை தற்போது நாங்கள் அறிகிறோம். கூடுதல் ஆவணங்களுக்கான மனுவுடன் நீதிமன்றத்தின் உத்தரவு தாளினை மனுதாரர் பதிவிற்கு கொண்டு வந்துள்ளார். மேல்முறையீட்டாளர்களுக்கு அழைப்பாணை சார்வு செய்திருந்தபோதிலும், அவர்கள் முன்னிலையாகவில்லை, எனவே, மேல்முறையீட்டாளர்களுக்கெதிராக ரூ.10,000/- உடன் பிணையுடன் கூடிய பிடியாணை வழங்கப்பட்டுள்ளது என்பது உத்தரவிலிருந்து வெளிப்படுகிறது. 05.09.2019 தேதியிடப்பட்ட உத்தரவு விளைவு பின்வருமாறு:-

ஒப்பம் xx தெளிவற்று அருண் குமார்,**05.09.2019**

சந்திரா பால் சிங், ஜிதேந்தர், கவுதம் பதிவு தாக்கல் செய்யப்பட்டது. குற்றஞ்சாட்டப்பட்ட சந்தீப்-ன் முன்னிலை அவரது வழக்குரைஞர் காசிம் அன்சாரி மூலம் விலக்கு

பெற்றுள்ளது. அனுமதிக்கப்பட்டது. மீதமுள்ள குற்றஞ்சாட்டப்பட்டவர்கள், அருண், சந்திரா பால், ஜிதேந்தர் மற்றும் கவுதம் ஆகியோர் முன்னிலையாகினர். குற்றஞ்சாட்டப்பட்ட ஜோதி மற்றும் பிட்டு-க்கு முறையாக அழைப்பாணை சார்வு செய்யப்பட்டது. குற்றஞ்சாட்டப்பட்ட ஜோதி மற்றும் பிட்டு முன்னிலையாகவில்லை. பிணையுடன் கூடிய பிடியாணை ரூ.10,000/- ஜோதி மற்றும் பிட்டு-விற்கெதிராக 18.09.2019 அன்று வழங்கப்பட்டது.

ஒப்பம் - xx தெளிவற்றது

அம்பிகா பந்த்

கூடுதல் அமர்வு நீதிபதி, லக்சர்,

ஹரித்வார் மாவட்டம்."

10. பின்னர், 18.09.2019-இல் வழக்கு கூடுதல் மாவட்ட நீதிபதியால் விசாரணைக்கு எடுக்கப்பட்டு கீழ்கண்ட உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது:-

ஒப்பம் xx தெளிவற்று அருண் குமார், 18.09.2019

சந்திரா பால் சிங், ஜிதேந்தர், கவுதம் கோப்பு தாக்கல் செய்யப்பட்டது. குற்றஞ்சாட்டப்பட்ட சந்திரா பால், கவுதம், ஜிதேந்தர் மற்றும் சந்தீப் முன்னிலையாகினர்.

குற்றஞ்சாட்டப்பட்ட ஜோதி மற்றும் பிட்டு-விற்கெதிராக வழங்கப்பட்ட

பிணையுடன் கூடிய பிடியாணைகள் சார்வு செய்தபின் திருப்பப்பட்டது.

பிணையுடன் கூடிய பிடியாணைகள் சார்வு செய்த பின்னரும் குற்றஞ்சாட்டப்பட்ட ஜோதி மற்றும் பிட்டு முன்னிலையாகவில்லை. எனவே, பிணையுள்ள பிடியாணைகள் அவர்களது முன்னிலையாதலை உறுதி செய்ய பிறப்பிக்கப்பட்டது.

உத்தரவாதம் அளிப்பவர்களால் பிணை அளித்திருந்தும் நீதிமன்றம் முன்பாக குற்றஞ்சாட்டப்பட்ட ஜோதி மற்றும் பிட்டு முன்னிலைப்படுத்தப்படவில்லை. குற்றஞ்சாட்டப்பட்ட பிட்டுவின் பிணை, குற்றஞ்சாட்டப்பட்ட அருண் குமார், குற்றஞ்சாட்டப்பட்ட ஜோதியின் பிணை அவரது தந்தையான குற்றஞ்சாட்டப்பட்ட சந்திரா பால் மற்றொரு பிணை குற்றஞ்சாட்டப்பட்ட அருண். இருவரும் நீதிமன்றத்தில் முன்னிலையாகினர். நீதிமன்றம் முன் பிட்டுவும், ஜோதியும் முன்னிலையாக்கப்படாததால் அவர்களால் தரப்பட்ட பிணை பத்திரங்கள் மீளப் பெறப்பட்டது. எனவே, கு.ந.ச., பிரிவு 446-ன்கீழ், அவர்களிடமிருந்து பிணை பெறமுடியாது போனதால் தொகையைப் பெறும் நோக்கில் அறிவிப்பு

வெளியிடப்பட்டது. உத்தரவாதம் தந்தவர்களின் விளக்கத்துக்காகவும், குற்றஞ்சாட்டப்பட்ட ஜோதி மற்றும் பிட்டு முன்னிலையாக 30.09.2019-இல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஒப்பம் - xx தெளிவற்றது

அம்பிகா பந்த்

கூடுதல் அமர்வு நீதிபதி, லக்சர்,

ஹரித்வார் மாவட்டம்."

11. 17.08.2019 தேதியிடப்பட்ட உத்தரவின் விளைவான மற்றும் தொடர்ச்சியான நடவடிக்கைகள், 05.09.2019 மற்றும் 18.09.2019 அன்று எடுக்கப்பட்ட நடவடிக்கைகளாகும். பின்னர் உள்ள நடவடிக்கைகள் எந்த வகையிலும் 17.08.2019 தேதியிடப்பட்ட உத்தரவின் சரித்தன்மை மற்றும் செல்லுந்தன்மையை பரிசீலிக்காமல் இருப்பதற்கான காரணமாகாது. கு.ந.ச., பிரிவு 446-ன்கீழ் 18.09.2019 அன்று அறிவிப்பு வழங்கப்பட்டது என்ற காரணத்தின்பேரில், 17.08.2019 தேதியிடப்பட்ட உத்தரவின் சரியான தன்மையை பரிசீலிக்க மறுத்து உயர்நீதிமன்றம் முற்றிலும் தவறிழைத்துவிட்டது. கு.ந.ச., பிரிவு 319-ன்கீழ் உள்ள அதிகாரத்தை செலுத்தி, 17.08.2019 தேதியிடப்பட்ட உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கக்கூடாது எனக் காணப்படும்போது, பின்னர் நடவடிக்கைகள் அனைத்தும் தாமாகவே முடிவுக்கு வந்துவிடும்.

12. கீழ்க்கண்ட வார்த்தைகளில் உயர்நீதிமன்றத்தின் கருத்து பதிவு செய்யப்பட்டுள்ளது:-

".....தற்போதைய சீராய்வு மனுதாரரின் விருப்பப்படி வழக்கு நடவடிக்கைகளில் 18.09.2019 தேதியன்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவு நிலைத்திருக்கும்வரை கு.ந.ச., பிரிவு 319-ன்கீழ் சீராய்வு மனுதாரர்களுக்கு அழைப்பாணை விடுத்து, 17.08.2019 தேதியன்று பிறப்பிக்கப்பட்ட எதிர்ப்புக்குள்ளான உத்தரவை ஒரே சமயத்தில், நீதிமன்றத்தில் எதிர்ப்பதென்பது நிலைக்கத்தக்கதல்ல என்பதே இந்நீதிமன்றத்தின் கருத்து."

அது சரியான கருத்து எனக் கூறமுடியாது.

13. 18.09.2019 தேதியிடப்பட்ட உத்தரவு மூலம் குற்றஞ்சாட்டப்பட்ட மேல்முறையீட்டாளரை முன்னிலையாகும்படி நீதிமன்றம் உத்தரவு பிறப்பிக்கும்போது, அது பொருத்தமான முடிவாக எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். ஆனால், மேல்முறையீட்டாளருக்கு அழைப்பாணை விடுக்கப்பட்ட 17.08.2019 தேதியிடப்பட்ட முந்தைய உத்தரவுக்கு, அந்த உத்தரவு பாதுகாப்புக்கு கேடயமாக அமையாது.

14. பதிவில் கொண்டுவரப்பட்ட நீதிமன்ற பிந்தைய நடவடிக்கைகள், 2 மற்றும் 1-ஆம் மேல்முறையீட்டாளர்கள் நீதிமன்றம் முன்பு முன்னிலையாகி, அவர்களுக்கு பிணை வழங்கியதை காட்டுகிறது.

15. சம்பவம் நடந்த நாளன்று 1-ஆம் மேல்முறையீட்டாளரின் பிறந்த தேதி 01.04.2000 ஆக இருந்ததால் அவர் இளங்குற்றவாளி என்பது இந்த

மேல்முறையீட்டில் எடுக்கப்பட்ட காரணங்களில் ஒன்றாகும். மேற்சொன்ன காரணம் உயர்நீதிமன்றத்தால் பரிசீலிக்கப்பட்டிருக்க வேண்டும்.

16. எனவே, 27.09.2019 தேதியிடப்பட்ட உயர்நீதிமன்றத்தின் எதிர்ப்புக்குள்ளான உத்தரவை நிலைநிறுத்த முடியாதது மற்றும் நீக்கறவு செய்வதற்குரியது என்பதே எங்களது கருத்து. நாங்கள் அவ்வாறே உத்தரவிடுகிறோம். மேல்முறையீட்டாளர்களின் குற்றவியல் சீராய்வு மனு சட்டப்படி உயர்நீதிமன்றத்தால் புதிதாக பரிசீலிக்கப்படவேண்டும். மேல்முறையீடு அனுமதிக்கப்படுகிறது.

மேல்முறையீடு அனுமதிக்கப்பட்டது.

<u>பொறுப்புத்துறப்பு</u>

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்து கொள்வதற்கும் பயன்படுத்திக் கொள்வதற்கும் உட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக் கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல் முறையான நோக்கங்களுக்கும் மற்ற தீர்ப்புரையை நிறைவேற்றறலுக்கும் செயற்படுத்துதலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்".